<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : துணைத் தலைவர் அவர்களே, "சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1975) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) தொடர் கூட்டத்தில் ஆற்றப்பட்ட அலுவல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் 21–லிருந்து இந்தத் தொடர் கூட்டத்தில் நடந்த நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு :—

மேலவை கூடிய நாட்கள்	30
மேலவை கூடிய நேரம் .. .. .. (21—4—1975 வரை)	71 மணி, 40 நிமிடங்கள்
அரசின் சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டவை.	23
கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டவை.	24
ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள்.	35
நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள்.	38
அவை முன் கொண்டு வரப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.	7

உரிமைப் பிரச்சினை	1	
பல்வேறு துறைகளுக்கான கொள்கைக் குறிப்புகள் விவாதிக்கப்பட்டவை.	5	(7 நாட்கள் நடந்தன)
கொள்கைக் குறிப்பு விவாதங்களில் ஆற்றிய உரைகள்.	56	
விடையிறுக்கப்பட்ட வினுக்கள்	265	
அவையில் விடை வைக்கப்பட்ட உடுக் குறியிடாத வினுக்கள்.	4	
துணை வினுக்கள்	570	
ஆற்றிய உரைகள்	213	

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை காலவரையின்றி ஒத்தி வைக்கப் படுகிறது.

பின்னர், அவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7–23.)

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

184. Notification issued with G.O. P. No. 554, Commercial Taxes and Religious Endowments, dated the 6th November 1974 in regard to amendment to the Revenue Department Notification No. 407 of 1972, dated the 5th May 1972, published at page 895 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 12th July 1972. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act,* 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

185. Notification issued with G.O. Ms. No. 1546, Agriculture, dated the 3rd October 1974 relating to inclusion of paddy and gingelly in respect of Uthiramerur and Madhurantakam markets. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act,* 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]